# 333, அம்மையப்பன் தெரு




பாலகுமாரன்

# 333, அம்மையப்பன் தெரு

......................."யார் குரு?"

"தெய்வத்துக்கிட்ட போறதுக்கு உனக்கு தெரியாது. உன்னை கூட்டிட்டு போறது குருதான்."

"அப்பா எப்படி பள்ளிக்கூடத்துக்கு கூட்டிட்டு போறாரோ, அப்பா எப்படி கோவிலுக்கு கூட்டிட்டு போறாரோ, அப்பா எப்படி யானை பார்க்கறதுக்கு கூட்டிட்டு போறாரோ அந்த மாதிரி குரு உன்னை கூட்டிட்டுப் போவார்."

"சங்கர மடமும் அதுதானே சார். அது இன்னும் ஆயிரம் வருஷத்து பழசாச்சே."

"உண்மை. உண்மை. ஆனா அங்க மத ஸ்தாபனம் தான் முக்கியமா இருந்தது. இந்தியா முழுக்க சுத்தி சுத்தி இரண்டாங்கெட்டானா இருந்த மதங்களையெல்லாம் ஓரமா தூக்கி உட்கார வச்சு ஷண்மதம்னு பண்ணவர் அவர். நான் மறுக்கவே இல்ல."

"ஆனா, என்னை கெட்டியா புடிச்சுக்கோ, நான் உனக்கு கிருஷ்ணரை காண்பிக்கறேன்" இதுதான் மாத்துவர்களுடைய அருமையான தத்துவம்.

உனக்கு அவ்வளவு பக்குவம் போறாது. குரு இல்லாத தெய்வத்துக்கிட்ட போகவே முடியாது. குருவுக்கு அதுதான் வேலை. உன்னை தெய்வத்துக்கிட்ட கொண்டு போறதுதான் வேலை.

அதுக்காகத்தான் அவர் உட்கார்ந்துண்டு இருக்கார். எப்படா வருவே, எப்படா வருவேன்னு காத்துண்டு இருக்கார்.

எது உன்னை வரவிடாம தடுக்கறது. உன் கர்வம். உனக்கு எல்லாம் தெரியுமாமே அப்படின்னு நினைச்சுண்டு இருக்கே.

தெரியாது அப்படின்னு உனக்கா தோன்றபோது, உன்னுடைய பெயிலியர் உனக்கு ஒன்னும் தெரியலைன்னு உணர்த்துகிறபோது, யார்கிட்ட கேட்கறது அப்படின்னு வர்றது.

தெய்வம் கை விட்டுடுத்து அப்படின்னு தோன்றது. இப்படி கஷ்டம் வந்திருக்கே, தெய்வம் கை விட்டுடுத்துன்னு தோன்றது.

அப்போ, இல்லடா பயப்படாத. தெய்வம் கைவிடாது. அது உன்னை கிட்ட கூப்பிட்டுக்கறதுக்காக உனக்கு கஷ்டம் கொடுத்திருக்கு.

என்ன கஷ்டம்னு சொல்லு. நான், நீ உட்கார்ந்து யோசனை பண்ணி இந்த கஷ்டத்தை தீர்த்துடலாம். இந்தக் கஷ்டத்தை எப்படி தீர்த்துடுன்னு ஸ்வாமிகிட்ட வேண்டிக்கறதுன்னு நான் யோசனை பண்றேன். உனக்காக.

அந்த சிஷ்யன் என்ன பண்ணுவான். கதறுவான். தெய்வத்தை விட நீ பெரியவன் இல்லையா. தெய்வம் வந்து கேட்கலையே. தெய்வம் வந்து பேசலியே. என்ன கஷ்டம் உனக்குன்னு பேசலியே. கஷ்டத்தை கொடுத்துட்டு ஓரமா போயிடுத்தே.

நீ இல்ல, உனக்கு என்ன கஷ்டம் நான் பார்த்துக்கறேன்னு சொல்றியே. நீ தெய்வத்தை விட பெரியவன் இல்லையான்னு அப்படியே சாஷ்டாங்கமா எட்டு அங்கங்களும் பட விழறான். எல்லா திக்குலையும் விழுந்து நமஸ்காரம் பண்றான்.

இங்கே பிருந்தாவனத்துல நிக்க வைச்சுட்டு எட்டு மூலையிலேயும் நமஸ்காரம் பண்ணுன்னு சொல்லுவா. எட்டு அங்கங்கள் பட எட்டு மூலையிலேயும் பண்ணனும். சுத்தி சுத்தி வந்து பண்ணனும். பண்ணி பண்ணி மாளாது. தீராது. அத்தனை பணிவு.

அந்தப் பணிவு வருகிறபோது, குருவிடம் அந்தப் பணிவு வருகிறபோது ஒரு நிதானம் வர்றது. அந்த நிதானம் வரும்போது ஒரு நம்பிக்கை வர்றது.

நம்பிக்கையும் நிதானமும் வருகிறபோது பிரச்சனை என்னன்னு புரியறது. பிரச்சனை என்னன்னு புரிஞ்சா "ப்ராப்ளம் சால்வ்ட்." அந்தக் கூட்டத்தில் சிலபேர் கை தட்டினார்கள்….................................